சுதந்திரன்

SUTANTIRAN

★ விலை சதம் 35. வ.ஆ. 2006 மார்கழி 30, முஹறம் 11, (14-1-76) புதன் புத்தகம் 29 இதழ் 26


# மட்டக்களப்பில் கொந்தளிப்பு!

## இளைஞர் பேரவை உறுப்பினர் இருவர் குண்டர்களால் தாக்கப்பட்டனர்!

### இரத்தவாந்தியெடுத்த நிலையில் ஒருவர் ஆஸ்பத்திரியில் அனுமதி!

மட்டக்களப்பில் தமிழ் இளைஞர் பேரவை இளைஞர்கள் இருவர் மட்டக்களப்பு இரண்டாவது பா.உ.வும் அரசாங்க ஊதுகுழலுமான பி.ஆர். செல்வநாயகம் முன்னிலையில் வைத்து சுமார் 30 குண்டர்களால் மிருகத்தனமாகத் தாக்கப்பட்டதாக அறியப்படுகிறது. இரும்புக் கம்பிகளாலும், தடிகளாலும் இவர்கள் தாக்கப்பட்டதாகவும், இதில் தங்கவேலாயுதம் என்ற இளைஞர் மிக ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு அரசினர் வைத்தியசாலை பத்தாம் இலக்க வார்டில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. இந்த இளைஞர் இரத்தவாந்தியெடுத்து வருகிருராம். இதையடுத்து மட்டக்களப்பில் மிகவும் பரபரப்பான நிலைமை தோன்றியுள்ளது.

தைப்பொங்கலை யொட்டி 11.1.76 ஞாயிறு அன்று மட்டக்களப்பு தேனுடு மாமன்றத்தினர் மட்டக்களப்பு மாநகரசபை மண்டபத்தில் நடத்தவிருந்த தமிழர் திருநாள் நிகழ்ச்சியையொட்டி 10.1.76 சனிக்கிழமை தங்கவேலாயுதம், பரமதேவா என்ற இரு இளைஞர்கள் (தமிழ் இளைஞர் பேரவையைச்சேர்ந்தவர்கள்) வாகனமொன்றில் மேற்படி விழாவையொட்டி ஒலிபெருக்கியில் அறிவித்துக்கொண்டு சென்றபோதே இச்சம்பவம் நடைபெற்றதாம்.

இந்த இளைஞர்களை மதுபோதையிலிருந்த சுமார் 30 குண்டர்கள் இடைமறித்து இரும்புக் கம்பிகளாலும், தடிகளாலும், பொல்லுகளாலும் மோசமான முறையில் தாக்கினர்களாம். இத்தாக்குதலைச் சற்றுத் தூரத்தில் நின்றபடி மட்டக்களப்பு இரண்டாவது பா. உ. திரு. பி. ஆர். செல்வநாயகம் புன்னகை தவழப் பார்த்துக்கொண்டு நின்ருராம்! தாக்குதல் நடத்திய காடையர்களில் ஒருவர் என்று சந்தேகிக்கப்படும் நபர் ஒருவர் இப்போது

—4ம் பக்கம் பார்க்க

# தமிழ்த் தியாகிகளுக்கு மீண்டும் நினைவுச் சின்னம்!

அனைத்துலகத் தமிழ் மாநாட்டின் இறுதிநாளான 1974 சனவரி 10ம் நாள் யாழ் வீரசிங்கம் மண்டபத்தின் முன்னல் பொலிசாரின் அட்டூழியத்தாக்குதலின் விளைவாக உயிர்நீத்த தமிழ்த் தியாகிகளுக்கு மீண்டும் அதே இடத்தில் நிரந்தர நினைவுச் சின்னம் நிறுவப்பட்டுவிட்டது! தமிழர் கூட்டணித் தலைவர்கள், அனைத்துலகத் தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக் கிளைப்பிரமுகர்கள் முன்னிலையில் தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினர் இந்த நினைவுச் சின்னத்தை சென்ற 9.1.76 வெள்ளிக்கிழமை காலையில் நிறுவினர். 'தடைகள் பல உண்டெனினும் தடந்தோளுண்டு' என்ற புரட்சிக்கவிஞரின் வார்த்தைக்கொப்ப, துணிவுடன் முன்வந்து தமிழ்த் தியாகிகளுக்கு சிலை நிறுவிய தமிழ் இளைஞர்களை தமிழ்த்தாய் வாழ்த்துகிறுள்!

ஏற்கெனவே 1975ம்ஆண்டு தை பத்தாம் திகதி இதே இடத்தில் தியாகிகள் நினைவுத் தூண்கள் நிறுவப்பட்டதும், சில காலத்தின் பின்னர், அது இனந்தெரியாத தமிழ்த்துரோகி எவராலோ இடித்துத் தள்ளப்பட்டதும் தெரிந்ததே. மீண்டும் இதே இடத்தில் தமிழ்த் தியாகிகளின் நினைவுச் சின்னத்தைத் தமிழர் கூட்டணி நிறுவும் என்று அப்போது தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகமான நாவலர் அமிர்தலிங்கம் பகிரங்கமாக அறிவித்திருந்தார். அதற்கமைய தமிழர் கூட்டணியின் இளைஞர் இயக்கமான தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக்கிளையினர் 9.1.76 வெள்ளிக்கிழமை காலையில் இந்த நினைவுச் சின்னத்தை நிறுவினர்.

அரசாங்கத்துக்கு சொந்தமான யாழ்கோட்டைமுற்ற வெளியில் வீரசிங்கம் மண்டபத்திற்கு எதிரேஇந்த நினைவுச் சின்னத்தை இளை

—4-ம் பக்கம் பார்க்க

# தி.மு.க. ஆட்சியைக்கவிழ்க்க டெல்லியில் உயர்மட்டச் சதி!



தமிழகத்தில் தி. மு. கழக ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு டெல்லியில் உயர் மட்டச் சதியொன்று உருவாகிவருவதாக டெல்லியிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன, தி.மு.க. ஆட்சி அப்படிக் கவிழ்க்கப்படுமானல் தமிழகத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்படக்கூடும் என்று அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

1976ம் ஆண்டு பெப்ரவரியில் தமிழ்நாட்டுக்கும் டெல்லிப் பாராளுமன்றத்துக்கும் ஒருசேர பொதுத்தேர்தல் நடைபெறவேண்டும். ஆனல் டெல்லிப் பாராளுமன்றத் தேர்தல்—அதாவது இந்தியப் பொதுத்தேர்தல் அவசரகாலச்சட்டத்தின் கீழ் ஓராண்டுக்கு தள்ளிப்போடப்பட்டுள்ளது,

இதற்கிடையில். 1976ம் ஆண்டு பெப்ரவரியில் தமிழக சட்டசபைத் தேர்தலை மட்டும் நடத்தக்கூடாதென்றும் தேர்தல் நடத்துவதானல்டெல்லிக்கும் தமிழ்நாட்டுக்கும் ஒருமித்தே தேர்தலை நடத்தவேண்டும் என்றும் தி.மு.க. சார்பில் கருத்துக் கூறப்பட்டுவருகிறது.

இதே வேளையில். இந்திரா [illegible] உயர்மட்டப்

—4-ம் பக்கம் பார்க்க

## தமிழர் கூட்டணியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழு

தமிழர்கூட்டணியின் கட்டுப்பாட்டை மீறும் கூட்டணி பா. உ. க்கள் மீது தேவையான ஒழுங்கு நடவடிக்கைகளையெடுப்பதற்கு பூரண அதிகாரம் கொண்ட குழுவொன்றை தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக்குழு தெரிவு செய்துள்ளது. இக்குழுவின் தலைவராக மூதறிஞர் தந்தை செல்வாவும், செயலாளராக கூட்டணி செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கமும் கடமையாற்றுவர். குழு உறுப்பினர்களாக திருவாளர்கள் எக்ஸ். எம். செல்லத்தம்பு, மு. மாணிக்கம், சு. நடராசா, தா. சங்கரப்பிள்ளை, சி. கதிரவேற்பிள்ளை, கு. நேசையா, மு. சிவசிதம்பரம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

கட்டுப்பாட்டை மீறும் கூட்டணி பா. உ. க்கள் எவராக இருந்தாலும் அவர் மீது இக்குழு நடவடிக்கையெடுக்கவேண்டுமென்று திரு. பா. நேமிநாதன் பா. உ. கொண்டுவந்த பிரேரணை திரு. செ. இராசதுரை பா. உ. வால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 11-1-76 ஞாயிறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இக்குழு தெரிவு செய்யப்பட்டது.


சுடர்

CHUDAR

பொங்கல் இதழ்

இப்போது விற்பனையாகிறது!

★ தித்திக்கும் இலக்கியப் பேழையாய் தெவிட்டாத தீங்கரும்பாய் புத்தம் புதிய அம்சங்களுடன்எங்தம் கிடைக்கிறது.

சுடர் விலை ரூபா ஒன்று மட்டுமே.


## தமிழர் திருநாளன்று துக்கதின அனுட்டானம்?

சனவரி 15ம் நாள் தமிழினத்தின் தேசியத் திருநாளான பொங்கல் விழா என்பதை யாவரும் அறிவர். ஆனல் அதே நாளை சினத்தலைவர் ஞ. என்.லாயின் மரணத்தை யொட்டி— [illegible] ஆனல் அதற்காகப் போயும் போயும் தமிழர்களின் பொங்கல் நாள் தானு கிடைத்தது? இன்னேர் நாள் அதை இங்கு அனுட்டித்திருக்கலாமே! என்று தமிழ்மக்கள் மத்தியில் பரவலாகக் கேட்கப்படுகிறது.

# 87 தமிழருக்கும் பட்டை நாமம்!

மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பாளர் (Medical Laboratory Technologist) [illegible] ஒரு தமிழரும் தெரிவுசெய்யப்படவில்லை. [illegible] இதே [illegible] நேர்முகப் பரீட்சை நடைபெற்றபோது — நேர்முகப் பரீட்சைக்குச் சென்றிருந்த [illegible] 87 தமிழர்கள் சென்ருர்களாம். ஆனல் ஒரு தமிழர்கூடத் தெரிவுசெய்யப்படவில்லை. நேர்முகப் பரீட்சை நடத்தியவர்களில் ஒருவர் (சிங்களவர்) தனது மற்ருேர் தமிழ் நண்பரிடம் இதுபற்றிக் கூறுகையில், எனது மனச்சாட்சியே என்னை குற்றவாளியென்று கூறுகிறது. எங்கள் (சிங்கள) பையன்களைவிட, உங்கள் (தமிழ்) பையன்கள் கெட்டித்தனமுள்ளவர்களாகத்தான் இருந்தார்கள். ஆனல் நான் என்ன செய்யமுடியும்? அரசாங்கத்தின் கொள்கையை நான் மீற முடியுமா? என்று அழமாட்டாக்குறையாக வருத்தப்பட்டாராம்!

## பொங்கலோ பொங்கல்!

பொங்கலோ பொங்கல் என்று பொங்குக புவனமெங்கும்<br>
செஞ்சுடர் பரிதிதன்னை செகமதில் போற்று நன்னுள்—<br>
பொங்கலால்<br>
கோடி துன்பம் பசியெலாம் தீர்க்கும் மேழிச்<br>
செந்தமிழ் உழவர்க் கெல்லாம் பொங்கலோ பொங்கல்.

—வளவை வளவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வால்டர் ஷ்வாஸ் அறிக்கை

# தமிழர் பிரச்சினையினால் இலங்கை மற்றோர் 'சைப்பிரஸ்' ஆகும்!

கடந்த 50 வருடங்களாகப் பெரும்பான்மைச் சிங்களவர்களுக்கும் சிறுபான்மைத் தமிழர்களுக்கும் உள்ள உறவு மிகவும் மோசமாகி வருகிறது. சிங்களவர்களிடையே சிங்கள தேசிய உணர்வும், பௌத்த மத வெறியும் இந்நிலைமை அதிகரிக்க ஒரு காரணமாயிற்று. பாரபட்சமற்ற பிரித்தானியர்களின் வெளியேற்றத்தையடுத்து பலம் வாய்ந்த பெரும்பான்மை சிங்களவர்களின் பாராளுமன்ற ஆட்சியும் இந்த நிலைக்கு மேலும் எண்ணை ஊற்றின.

இன்றைய நிலையிலும் தொடரும் இந்தப் பிரிவினை உணர்ச்சி 3 ஆண்டுகளுக்கு முன்னர் 1972ம் ஆண்டு இலங்கை குடியரசாகிய நாளிலிருந்து அதிகரித்தது. நீதிமன்றங்களிலும், அரசாங்கத் திணைக்களங்களிலும், மற்றும் பொது விடங்களிலும் சிங்களம் மட்டுமே அரசகரும மொழி என்பது உறுதிப்படுத்தப்பட்டதோடு பௌத்த மதமும் தேசிய மயமாக்கப்பட்டது. இதில் தமிழுக்கு அளிக்கப்பட்ட சில சலுகைகள் போதாது என்பதும் தமிழர்களது வாதமாகும்.

இந்தக் குடியரசு அரசியல் திட்டத்தில் பௌத்த மதத்துக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்தது ஏனைய பெரும்பான்மை மதங்களான இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மதங்களுக்குரிய உரிமைகள் மறுக்கப்படுவதோடு பழைய அரசியல் திட்டத்தில் சிறுபான்மை மக்களுக்கு இருந்த பாதுகாப்புக்களும் இடம் பெறவில்லை—என்பது குறிப்பிடத்தக்கது.

இது வரையில் இந்த அரசியல் திட்டம் 26 லட்சம் தமிழரை நேரடியாகப் பாதிக்கவில்லை, தமிழ் மொழிக்கும், தமிழர் வாழ்வுக்கும் சில பாதுகாப்புக்கள் எழுத்தளவிலேனும். இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் பெரும்பான்மை சிங்களத் தலைவர்கள் தங்கள் மக்களை உணர்ச்சியோடு வைத்திருப்பதற்காக எடுத்திருக்கும் நடவடிக்கைகள் தமிழர்களை இரண்டாந்தரக் குடிகளின் நிலைக்கு கொண்டு வந்திருக்கின்றன. தமிழர்களின் பயம் அவர்களின் எதிர்காலத்தைப் பற்றியதாகவுள்ளது. தொழில், கல்வி பொருளாதாரத் துறைகளில் தமது நிலை பலவீனமடைந்து வருவதை அவர்கள் காண்கிறார்கள். பரம்பரை பரம்பரையாகத் தமிழர்கள் அனுபவித்து வந்த வசதிகள் அவர்களிடமிருந்து பறிக்கப்படுவது கண்டு அவர்கள் கொள்ளும் பயத்தில் அர்த்தமுள்ளது. இதைவிட, எந்தவொரு சிறுபான்மை இனத்துக்கும் இருக்கும் பாதுகாப்பை பற்றிய சாதாரண பயம், இலங்கைத் தமிழர்களிடமும காணப்படுகிறது.

(திருத்தம்:— தமிழர்களின் அபிலாஷைகளை திருப்திப்படுத்தும் அம்சங்கள் அரசியல் சட்டத்தில் இருப்பது போல கட்டுரையாளர் கூறியிருப்பது தவறானது. உண்மையில் அரசியல் சட்டம் தமிழர்களைப் பெருமளவு பாதித்துள்ளது.

1. அது தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கியுள்ளது.

2. மூன்றில் இருமடங்கு சிங்களப் பெரும்பான்மையின்றி மாற்ற முடியாத நிலையில் சிங்களத்தை மட்டும் ஒரேயொரு உத்தியோக மொழியாக்கி உயர்ந்த இடத்தில் அது வைத்துள்ளது.

3. மூன்றில் இரண்டு மடங்கு சிங்களப் பெரும்பான்மையின்றி திருத்த முடியாத அளவுக்குத் தமிழ் மொழி தாழ்ந்த நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

4. சிறுபான்மை மக்களுக்கு ஓரளவு பாதுகாப்புத் தந்த முந்திய அரசியல் சட்டத்தின் 29ம் பிரிவு அகற்றப்பட்டுவிட்டது.

5. தமிழ் மொழிக்கும், தமிழர் வாழ்வுக்கும் சட்டப் பாதுகாப்பு எதுவும் தரப்படவில்லை.

பிரிட்டிஷ் ஆதிக்கத்தின் கீழ் தமிழர்களுக்கு தாராளமாகக் கிடைத்துவந்த அரசாங்க உத்தியோகங்கள் இப்போது இல்லாமற் போனது தான் தமிழர்களின் பிரச்சினை என்பதாக கட்டுரையாளர் குறிப்பிட முனைவதும் முற்றிலும் தவறானதாகும். தமிழர்களின் இப்போதைய பிரச்சினை தனது தேசிய இன தனித்துவத்தையும் நிலத்தையும் பாதுகாக்கும் அதிமுக்கிய பிரச்சினையாகும்.)

புதிய அரசியல் திட்டம் அநேக தமிழர்களிடையே ஒருபுது ஒற்றுமையை உருவாக்கியுள்ளது. தமிழரசுக் கட்சி, தமிழ்க்காங்கிரஸ், தோட்டத் தொழிலாளர்களைப் பிரதிபலிக்கும் அரசியல் ஈடுபாடற்ற தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ், ஆகியவை ஒன்று சேர்ந்துள்ளன. அரசியற்திட்டம் மாற்றப்படவேண்டும் என்ற கண்டன எதிர்ப்போடு ஆரம்பிக்கப்பட்ட தமிழர் கூட்டு முன்னணி கடந்த ஓரிரண்டு ஆண்டுகளாக தனிநாடு வேண்டும் என்ற குரலை எழுப்பி வருகிறது. கூட்டு முன்னணியிலுள்ள எல்லாத் தலைவர்களும் அதற்கு ஆதரவு தரவில்லையென்றாலும் (இது 1973ம் ஆண்டு நிலைமை) ஆவேசம் நிறைந்த இளைஞர்கள் பிரிவினைக்கு கடும் குரலெழுப்புகிறார்கள். மற்றுமோர் வங்காளதேசம் உருவாக்கவேண்டும் என்ற இளைஞர்களின் ஆவேசத்தின் முன் தமிழ்த் தலைவர்கள் திக்குமுக்காடுகிறார்கள்.

சட்டவிரோதமான ஊர்வலங்கள் மூலம்தான இது வரை எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்பட்டிருக்கின்றனவே யன்றி ஆயுதப் போராட்டத்துக்காகிய அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. 1971ம் ஆண்டு சிங்களவர்களிடையே நடைபெற்ற சேகுவாராப் போராட்டப் புரட்சியின் பின் அரசாங்கம் மிகவும் விழிப்புடன் இருக்கிறது. இருந்தும் பிரிவினை உணர்ச்சி வளர்ந்து வரும் இவ்வேளையில் வங்காளதேசத்து நிலை உருவாகாது என்று சொல்லவும் முடியாது. 22 மைல்கள் கடலாற் பிரிக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டைத்தவிர வங்காள தேசத்துக்கு இருந்தது போன்ற வெளிநாட்டு உதவிகள் எதுவும் தமிழர்களுக்கு இல்லை.

இப்போது இருக்கும் நிலை தொடருமானால் வட அயர்லாந்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கலவரங்களைப் போன்றும், சைபிரசில் நடைபெற்ற உள்ளூர் கலவரத்தைப் போனறும் ஓர் நிலை நிச்சயம் உருவாகும்!

தமிழர்களின் இன்றைய நிலைக்கு சிங்கள — தமிழ் தேசிய இனங்களை ஒன்றாகப் பிணைத்து விட்டு வெளியேறிய ஆங்கிலேயரே காரணமாகக் கணிக்கப்படுகிறார்கள். பலம் வாய்ந்த சிங்களப் பெரும்பான்மையைக் கொண்ட பாராளுமன்ற முறையால் தமிழர்களின் பிரச்சினை அதிகரித்துக் கொண்டே போகின்றது. ஜனநாயகமுறையில், சிறுபான்மையினர் என்ற காரணத்தால், அவர்கள் கோரிக்கைகள் தோல்வியையே தழுவும். இந்தியாவில் உள்ள இஸ்லாமியரிடையே இந்தப் பிரச்சினை கிளம்பியபோது பாகிஸ்த்தான் நாட்டைப் பிரித்தது (24 வருடங்களின் பின் வங்காளதேசத்தையும் பாகிஸ்தானில் இருந்து பிரித்தது.) மூலம் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட்டது.

ஆங்கிலேயர் இலங்கையை விட்டு வெளியேறிய சமயத்தில் சிறுபான்மையினருக்குப் போதிய பாதுகாப்புக்கள் வழங்கப்படும் என்ற சிங்கள ஆட்சியாளரின் வாக்குறுதிகளின் பேரில் தான் சுதந்திரத்தை வழங்கிவிட்டுச் சென்றனர். இலங்கை சுதந்திரம் அடைந்த சமயத்தில் பொறுப்பேற்றிருந்த சோல்பரிப்பிரபு, இலங்கைக்காகத் தன்னால் எழுதப்பட்ட அரசியற் திட்டத்தில் மனிதர்களுக்குத் தேவையான உரிமைகள் அனைத்தையும் உள்ளடக்கிவிட்டேன், என்ற திருப்தியில் தான் வெளியேறினார். இருந்தும் பின்னால் நடந்தவைகளைப் பார்த்து இந்தியா, பாகிஸ்தான், நைஜீரியா போன்ற நாடுகளில் உள்ளதுபோன்று சிறுபான்மை இன மக்களுடைய அடிப்படை உரிமைகளைச் சோல்பரிக் கமிஷன் வலியுறுத்தாமல்வந்ததில் உள்ள தவறுக்காக மனம் நொந்திருக்கிறார்.

"ஆங்கிலேயர்கள் வெளியேறியபொழுது எங்களுடைய சுதந்திரத்தைக் கேட்காமல் விட்டதும், சிங்களவர்களின் மீது கண்மூடித்தனமான நம்பிக்கையை வைத்ததும் எமது பெரும் பிழை," என்று கூட்டு முன்னணித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் அவர்கள் கூறியிருக்கின்றார்.

வடக்கு மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் 14 லட்சம் பூர்வ குடித்தமிழர்கள் வாழ்கின்றார்கள். அரசாங்கத்தின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தின் மூலம் கிழக்கு மாகாண ஜனத்தொகையில் பாதி சிங்கள மயமாக்கப்பட்டுள்ளது. இதைவிட கொழும்பு போன்ற நகரங்களிலும் சில பகுதிகளில் தமிழர்கள் பெருமளவில் வசிக்கிறார்கள்.

12 லட்சம் இந்தியத் தமிழர்கள் எனப்படும் மலையகத் தமிழர்களும் தேயிலைத் தோட்டப் பிரதேசத்தில் சிதறி ஏனைய தமிழ் மக்களின் தொடர்பற்று வாழ்கின்றார்கள். இலங்கை சுதந்திரமடைந்த சில நாட்களுக்குள் இந்த மலையகத் தமிழர்களில் பெரும்பான்மையினரின் பிரஜாவுரிமை, வாக்குரிமைபறிக்கப்பட்டதோடு மட்டுமன்றி, அவர்களைப் பிரதிபலித்த பாராளுமன்ற அங்கத்தவர்களின் ஸ்தானங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இலங்கை — இந்தியாவிற்கிடையில் ஏற்பட்ட இரு ஒப்பந்தங்களின் பின்னர் 6 லட்சம் மலையகத் தமிழர் இந்தியாவுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

இதற்கிடையில் நாளாந்தம் நடந்து வரும் நிகழ்ச்சிகளும் வளர்ந்து வரும் பிரிவினை உணர்ச்சியும் இரு பகுதித் தமிழர்களையும் ஒன்றுபடுத்தும் என்பதற்குரிய சாத்தியக்கூறுகள் நிறைந்தளவில் தென்படுகின்றன. இதுவே தமிழர் கூட்டணியினர் நோக்கமுமாகும். மலையகத் தமிழர்களை வடக்கு—கிழக்கு மாகாணங்களில் குடியமர்த்த வேண்டும் என்பதும் தமிழர் கூட்டணியின் நோக்கம்.

1958ம் ஆண்டு இனக் கலவரத்தின் பின்னர் மலையகத் தமிழர்கள் வடக்கு—கிழக்கு மாகாணங்களில் குடியேற ஆரம்பித்து விட்டார்கள் என்று தமிழர் கூட்டணி கூறுகிறது.

ஆனால் இவர்களைச் சிங்களவர்களிடையே பரவலாக்கி, முடிவில் சிங்களவர்களாக இன மாற்றம் செய்து விடுவதற்குரிய நடவடிக்கைகளில் அரசாங்கம் ஈடுபட்டு இருக்கின்றது. இந்த இருவகை நோக்கங்களில் யாருடைய எண்ணம் கைக்கூடும் என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்று.

இதற்கிடையில் 1972ம் ஆண்டு குடியரசு அரசியல் திட்டத்தை எதிர்த்து தமிழர் கூட்டணியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இன்னும் நேரடியாகப் பிரிவினைக் குரலை எழுப்பவில்லை, என்பது குறிப்பிடத்தக்கது.

—வளரும்

## தமிழரை நியமிக்கக் கோரிக்கை

'ணிக்கட்டி முறிப்பு பிரதேசத்தில் இருக்கும் முதலிக்குளத்தில் புதிதாக திறக்கப் படவிருக்கும் பிரிவுக்காரியாதிகாரியாலயத்திற்கு சிங்கள காரியாதிகாரி நியமிப்பதை ஆட்சேபித்தும் தமிழ் பிரிவுக் காரியாதிகாரி நியமிக்கப் படவேண்டும் என்றும் தே. பே. உ. திரு. பா. நேமிநாதன் பொது நிர்வாக அமைச்சரை அவசரத் தந்தி மூலம் கேட்டுள்ளார்.

முதலிகுளம் தமிழ்ப் பிரிவாகவும், கோமரங்கடவல சிங்களப் பிரிவாகவும் இருக்கட்டும்; ஆகவே முதலிக்குளத்தில்புதிதாகத்திறக்கப்படும் பிரிவுக்காரியாதிகாரி அலுவலகத்துக்குச் சிங்களவரை நிறுத்திவிட்டு தமிழரை நியமிக்குக என பனிக்கட்டி முறிப்புச் பிரதேச கிராம சபைத் தலைவர் திரு. சி. க நடராசா தனது ஆட்சேபனையில் பொது நிர்வாக அமைச்சரைக் கேட்டுள்ளார். அத்தோடு கிராம முன்னேற்றச் சங்கங்களும், சனசமூக நிலையங்களும் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துளனர்.

## வங்கியாளர் பயிற்சி தமிழ் வகுப்புக்கள்

வங்கியாளர் பயிற்சி நிறுவனத்தின் தமிழ் வகுப்புக்கள் 1976 பெப்ரவரி 2ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதற்கான கட்டணங்கள் யாவும் 31-1-76க்கு முன்பு செலுத்தப்பட வேண்டுமென்ற மேற்படி நிறுவனத்தின் செயலாளர் அறிவித்துள்ளார். தமிழ் இளைஞர்கள் உடனடியாக இதைக் கவனத்திற்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சுதந்திர நாடுகள் – 2.

## சிங்கப்பூர்

மலாயாக் குடாநாட்டின் முனையில் உள்ள சிறியதீவு சிங்கப்பூர் என்பதை அறிவீர்கள். விஸ்தீரணம் 220 சதுரமைல்.

150 ஆண்டுகட்கு மேலாக ஆங்கில ஆட்சியில் அடிமைப்பட்டிருந்து பின் சுதந்திர மலேசிய சமஷ்டி அரசியல் அங்கம் வகித்தது சிங்கப்பூர். இதிலும் திருப்தியடையாமல் 1965ல் தனி நாடாகப் பிரிந்தது.

சீனர், மலாய்க்காரர், தமிழர் ஆகியோர் வாழும் சிங்கப்பூர் சனநாயக முறையில் நன்கு முன்னேறி விட்டது. துறைமுகமும் வியாபாரத் திறமையும் நாட்டைச் செழிக்கச்செய்கிறது. இனப் பிரச்சினை கிடையாது.

26 மைல் நீளமும் 14 மைல் அகலமுமே கொண்ட சிங்கப்பூர் சுதந்திரத் தனி நாடாக இருக்கமுடியுமானால் வடக்கு கிழக்கு மாகாணங்கள் சேர்ந்த திருகோணமலை இயற்கைத் துறைமுகத்தையும், அபிவிருத்தி செய்யக்கூடிய காங்கேசன்துறைத் துறைமுகத்தையும் கொண்ட தமிழ் ஈழம் ஏன் தனிநாடாக இயங்க முடியாது?

—சிவாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமக்கொரு திருநாள்!

## அரசியல் மேடை

அன்பு நண்பா,

பனியகன்றது, குளிர் நீங்கிற்று; குணதிசையில் எழு ஞாயிறு தோன்றிற்று; தை பிறந்தது; புள்ளினங்கள் ஆர்த்தன; பூம் பூம் என சங்கம் முழங்கிற்று; புதுத்தென்றல் வீசிற்று; மெல்லென அது அவன் மேனியை ஜில்லெனத் தழுவிற்று; துள்ளியெழுந்தனன் அக்காளை—அவன் உழவன்—அவன் தமிழன்! 'அத்தான் அதோ பாருங்கள்' என அவன் நெஞ்சில்இடம் கொண்ட ஆரணங்குஆசையுடன் உரைதிடவே திரும்பிப்பார்த்தான்—ஆங்கே வயற்காட்டிலிருந்துவந்திருந்த மணிமணியாம் நெற்குவியல்; மாங்கனிகள்; வாழைக்கனிகள்; தித்திக்கும் செங்கரும்பு; தெவிட்டாத பலாக்கனி, தேனும் கூட—சிரிப்பொன்று அவன் முகத்தில் இவற்றைக் காணும் போது!

உழைத்திட்டோம் நாளெல்லாம் வியர்வை சிந்த; உழைப்பின் பயன் இன்று கண்டோம் — உவகை கொண்டோம்; உலகுக்கே வழிகாட்டும் நம் குறள் தந்த வள்ளுவனும் இதனாலன்றோ—'சுழன்றும் ஏர்ப்பின்னதுலகம்' என்றும், உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்' என்றும் கூறிப்போந்தார்; ஏர் தன்னை மறந்து எம்மனோர் சில காலம் இருந்ததாலே பாரினில் தாழ்ந்திருந்தார்—பகைவர் முன் அடிமையானா—இன்றோ சீர் கொண்ட ஏர்கொண்டு திருவிடம் புதுக்கி வாழ்தலாலே யாருக்கும் அடிமையின்றித் தலை நிமிர்ந்து வாழ்கின்றார்—தமிழ்த்தாய் தனிச்சிறப்புக்கண்டாள் —தமிழ் ஈழம் மலர்ந்ததனால் தனிவாழ்வு நாம் கண்டோம்—தமிழர் கொடி உயர்த்திவிட்டோம்—தரணி மெச்சவாழ்கின்றோம் என்று தலைவன் கூற—

போதுமத்தான் போதமுங்கள் வீரதீரம்—நானென்ன அறியாதவளா உங்கள் வீரம்—களத்தினிலே-தமிழ் ஈழப் போராட்டக்களத்தினிலே — நீங்கள் அன்று மார்பினிலே பட்ட காயம் — மறக்காதே உங்கள் வீர நெஞ்சந்தன்னை—என்று புன்னகை இதழோடு பூவை கூற;

உன் இதழ் பட்டு என்றோ அக்காயம் மறைந்த தடி பெண்ணே—இனியவளே, என்னவளே என்னருகேவா கண்ணே-இனிய தமிழ்நாம் படிப்போம் எனத்தலைவன் கூற; ஊஹூம் நான் மாட்டேன்; இனிய நம் தைப்பொங்கல்இன்று அத்தான்; எழுந்திருங்கள்; இன்னுமா கேலிப் பேச்சு? அதோ நம் செல்வங்கள் சிரித்துப் பாடி அகமகிழ்ந்து கும்மாளம் கொட்டுகின்ற காட்சிபாரீர்! சரேலென்று சுனை சென்று சடுதியில் நீராடிவந்து சர்க்கரைப் பொங்கல் இங்கு இடுவோம் அத்தான்—என்று அணங்கு கூறிட அத்தானும் சிரித்தபடியே எழுந்து செல்கின்றான்! இன்பமழை பெய்த தாங்கே!

இன்ப கீதங்கள் ஓர் புறம்; இனிய நாதங்கள் ஓர் புறம்; வாழைகள் மகரதோரணங்கள் மற்றும் எழில் வண்ணத்தோற்றங்கள் மற்றோர் புறம்; ஆடலும் பாடலும், ஓர் புறம் மத்தள முழக்கம் மற்றோர் புறம்; மகிழ்ச்சிச் சிரிப்பொலி ஓர் புறம்; கைத்தாளமிட்டு கவிபாடுவோர் ஓர் புறம்; கவிதை புனைவோர் ஓர் புறம்; சதங்கையொலியின் கிண்கிணி நாதம் ஓர் புறம்; சந்தனமும் சவ்வாதும் அகிலும் தரும் நறுமணம் ஓர் புறம்; கூத்துக் கும்மாளமும் ஓர் புறம்; ஆலய மணியின் ஓசை ஓர் புறம்; ஆடவரும் பெண்டிரும் ஒருவருக்கொருவர் சந்தனத்தை வாரியிறைத்து கவலை மறந்து களித்திருக்கும் காட்சி ஓர் புறம்! அறச் சான்றோரின் அறிவுரைகள் ஓர் புறம்; மஞ்சிவிரட்டுக்களும் மற்றுமுள வீர விளையாட்டுக்களும் ஓர் புறம்; எங்கணும் மகிழ்ச்சி; எல்லோர் உள்ளத்திலும் கிளுகிளுப்பு; இல்லாமை இல்லை; இயலாமையும் இல்லை; எல்லோரும் எல்லாப்பெருஞ்செல்வமும் பெற்றார்; அதனாலே களிப்புவெள்ளம் பெருகிற்றாங்கே!

இஞ்சியும் மஞ்சளும் எங்கணும் மணத்தது; புதுப்பானை, புத்தரிசி, புதுவெல்லம் புதுத்தேன், புதுப்பால் கொண்டு புத்தமுது படைத்திட்டாள் பூவை நல்லாள்! பூரித்து நின்றான் அது கண்டு அவள் ஆளன்; கரும்பும், இளநீரும், விரும்புகின்ற முக்கனியும் சுவைத்து நின்றார் அவர்கள் பெற்றெடுத்த செல்வங்கள்!

### இன்பம் மலிந்ததை...!

—செ. சிவானந்ததேவன்

எந்தத் தமிழனும் சிந்தை குளிர்ந்திடும்
இன்பம் மலிந்ததைப் பொங்கலடி!
சிந்தும் எழில்நிறைச் சிட்டுகளே
யொன்றாய்
சேர்ந்து இதம்பெற வாருங்கடி!

காலை இளங்கதிர் வேலை தொடருமுன்
கங்கையிற் சென்று தலை முழுகி
சோலைக் கிளிகளே! தோகை மயில்களே
சுந்தரப் பட்டுடை சூடுங்கடி!

வீட்டுப் பொருளொளி வீசி மிளிரவே
வீதியெலாம் வண்ணக்கோலமிட்டு
மாட்டுக் குடிலிலும் மாவிலை தோரணம்
மங்கள் தீபங்கள் ஏற்றுங்கடி!

பச்சை யரிசியைப் பாலில் கலந்துமே
பக்குவ மாயதைப் பொங்கலிட்டு
இச்சை தவிர்ந்திட இரவி எழுகையில்
இன்பமுடன் மடை வையுங்கடி!

வாழ்வு செழித்திட வளங்களுடன்
பொருள்
வீரமும் கல்வியும் ஓங்கிடவே
தாழ்வு நலிந்தெங்கும் சமரசம்
பொங்கவே
தாளமுடன் கும்மி பாடுங்கடி!

கற்கண்டும் கனிச்சாறும், கருப்பஞ்சாறும், பாலும் தெளிதேனும் பருப்புஞ் சேர்ந்த சர்க்கரைப்பொங்கலத்தான் சாப்பிடுங்கள்—என்று கனிமொழியாள் ஊட்ட, இதிலெங்கே இனிப்புண்டு நான் வேண்டேன் இஃதென்று காளை ஊட—இதிலில்லா இனிப்புவேறெங்கே எனக்கேட்டு ஏந்திழையாள் கேள்வியினால் சாட — ஏனில்லை இங்குண்டு எனக் கூறி இளையவளின் இதழ்தன்னை இளைஞன் காட்ட—எங்கிருந்தோ அவ்விடத்தில் வந்து சேர்ந்த இளமழலைச் செல்வங்கள் அங்கவரைக் கட்டிக் கொள்ள—இல்லமெல்லாம் மகிழ்ச்சி வெள்ளம் பெருகிற்றாங்கே!

சாதி பேதமொழிந்து, வர்க்க பேதமொழிந்து, சுரண்டல் ஒழிந்து சுதந்திரம் பெற்ற தமிழ் ஈழத்தில் பொங்கல் விழா கொண்டாடப்படும் நாள் வரும்போது ஆங்கு எத்துணை மகிழ்ச்சி ஏற்படும் — எப்படியெல்லாம் களிப்பிலே என் தமிழினத்தார் மிதந்திடுவர் என்பதை எண்ணிப்பார்த்தேன்; என் கற்பனையில் நான் கண்ட காட்சியே மேலே தந்திருப்பது!

ஆம், இந்தப் பொங்கல் நாளிலே தமிழினத்தை சூழ்ந்துள்ள அடிமைத்தனத்தை—சாதீயப் பேயை —ஏற்றத்தாழ்வுகளை அகற்றிட — விடுதலை இயக்கத்தை வேகமுடன் முன்னெடுத்துச் சென்றிட உறுதி பூணுவோம்!

சிங்கள நாட்டுச் சிறைச்சாலைகளிலே நம் உடன்பிறப்புக்கள் அறுபதின்மர் காரணமின்றி கைதிகளாக்கப்பட்டுள்ளனர்; ஆண்டுக்கணக்காக அவர்கள் அடைத்துவைக்கப்பட்டுள்ளனர்; அவர்கள் தங்கள் தாய்தந்தையரை உற்றார் உறவினரை, நண்பர்களை, தம் மனைவியரை —காதலியரைப் பிரிந்து தமிழ் ஈழவிடுதலைக்காக சிறைக்கோட்டத்தில் சித்திரை வதைப்படுகின்றனர்; அவர்கள் நெஞ்சிலே விடுதலை வெறி பொங்கிக்கொண்டிருக்கிறது!

எத்தனையோ நம் உடன் பிறப்புக்கள் ஊரைவிட்டு நாட்டைவிட்டு — தம் உற்றோர் பெற்றோரைவிட்டுப் பிரிந்து விடுதலை வெறி பிடித்து காடுமேடாக அலைந்து கொண்டிருக்கின்றனர்! அவர்களை எண்ணும்போது நம் உள்ளங்களில் கண்ணீரன்றோ பொங்குகின்றது!

நண்பா, மஞ்சுவிரட்டுதல் — முரட்டுக் காளையை அடக்குதல் தைத்திருநாளையொட்டி நம் தமிழர் மத்தியில் நடைபெறும் ஒரு பழம்பெரும் வீர விளையாட்டாகும்! அத்தகைய வீரவிளையாட்டில் ஈடுபட்டு முரட்டுக்காளையை அடக்கும் வீரக்காளைக்கே தமிழ்க்கன்னி மாலையிடுவாள் அந்நாளில்! இன்றும் நாமோர் மஞ்சுவிரட்டிலேதான் ஈடுபட்டிருக்கிறோம்! வெறிபிடித்த பௌத்த சிங்கள ஏகாதிபத்தியம் எனும் முரட்டுக்காளையை அடக்கி எங்கள் தமிழ் ஈழத்தை—தமிழ் அன்னையை—தமிழ்க்குலத்தைக் காப்பாற்றுகின்ற மாபெரும் பொறுப்பை நம் தோள்களில் ஏற்றிருக்கிறோம்! அந்த வீரப்போரிலே — விடுதலைப்போரிலே நாம் நிச்சயம் வெற்றிபெறுவோம்; வெற்றிபெற்றே ஆகவேண்டும்! அந்த நல்ல நாள்தான் — சிங்கள ஏகாதிபத்தியம் எனும் முரட்டுக்காளையை அடக்கி தமிழ் ஈழத்துக்கு நாம் சுதந்திரமாலையை சூட்டும் நாள்தான் நமக்குத் திருநாள்! பொங்கற் புதுநாள்! வாழ்விலோர் பொன்னாள்!

அந்நாள்— சுதந்திரநாள் — தமிழ் ஈழம் மலர்கின்ற நாள் கண்டிட அயராதுழைத்திட இப்பொங்கல் நாளில் உறுதியெடுத்திடுவோம்! பொங்கலோ பொங்கல் — புதுவாழ்வு நாம் கண்டிடப்பொங்கலோ பொங்கல்!

உன் அன்புத் தோழன்

கோவை-மகேசன்

# சாலை இளந்திரையன் தரும் பொங்கல் செய்தி!

"உலகின் நாடுகளில் வாழ்கின்ற தமிழர்கள், இந்தியத் தமிழகத்திலோ ஈழத் தமிழகத்திலோ உள்ள அரசியல் கட்சிகளைத் தங்கள் நாடுகளில் இறக்குமதிசெய்யாமல், தமிழர்கள் என்ற பொது முத்திரையுடன் வாழவேண்டும்!"

பொங்கல் விழாவை ஒட்டி உலகத் தமிழர்களுக்கு விடுத்துள்ள ஒரு செய்தியில், உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் டாக்டர் சாலை இளந்திரையன் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது.

"உலகெங்கும் வாழும் தமிழர்களிடையே ஓர் ஒருங்கிணைவையும், நெருக்கத்தையும் உண்டாக்க முயன்று வருகின்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம், இந்தப் பொங்கல் நன்னாளில் தமிழர் அனைவருக்கும் தனது இனிய வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றது.

"நமது மொழி, நமது [illegible] ரூடப் பழக்கவழக்கம், [illegible] கட்டிக் காத்துவரும் சில மனிநெறிகள் இவைகளால் மனிதப் பொதுக்கூட்டத்திடையே நமக்கு ஒரு தனி அடையாளம் ஏற்படுகிறது. இந்த அடையாளமே, எல்லோர் முன்னிலையிலும் நம்மைத் "தமிழர்கள்" என்று எடுத்துக்காட்டுகிறது. இந்த அடிப்படையில், அரசியல்களுக்கு அப்பாற்பட்ட ஓர் இணக்கத்தையும் பண்பாட்டு நல்லுறவையும் தமிழரிடையே வளர்த்து வலுப்படுத்துவதே உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் நோக்கம். இப்படியான ஒரு பண்பாட்டு நெருக்கத்தை ஏற்படுத்துவதன் மூலம், எங்கும் உள்ள தமிழர்களிடையேஒரு புதிய நம்பிக்கையையும் புத்தெழுச்சியையும் உண்டாக்க முடியும் என்று உ.த.ப. இயக்கம் நம்புகிறது,

"இந்த நம்பிக்கையை வலுப்படுத்தும் விதமாக, உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்கள் எந்தெந்த நாடுகளில் வாழ்கிறார்களோ அந்த நாட்டுக் குடிகளாக — அந்தந்த நாட்டுத் தமிழர்களாக வாழ வேண்டும், தமிழின் தாயகமாகிய இந்தியா, அல்லது இலங்கைக்கே உரியவர்களாக அவர்கள் மற்ற நாடுகளிலே வாழக்கூடாது:

"பர்மாவிலோ, மொரீசியசிலோ, இங்கிலாந்திலோ, சிங்கையிலோ, தென் ஆப்பிரிக்காவிலோ, வேறு நாடுகளிலோ வாழ்கின்ற தமிழர்களை, அந்த நாட்டு மக்கள் தமிழர்களாகத்தான் காணுகிறார்கள்; காங்கிரஸ்காரராகவோ, தி. மு. க.வினராகவோ, அண்ணா தி.மு.க. வினராகவோ, தமிழ்க் காங்கிரசாரராகவோ, தமிழரசாராகவோ அவர்கள் நம்மைக் காண்பதும் களிப்ப

4-ம் பக்கத் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

சுதந்திரன்
SUTANTIRAN

# 'இனவிடுதலைக்காக உயிர்த்தியாகமும் புரியவேண்டும்'

**—வித்தியானந்தன்**

"சிறை செல்வதன் மூலமும், தேவைப்படும்போது உயிரையும் தியாகம் செய்வதன் மூலமுமே இன விடுதலைப் போராட்டத்தில் நாம் வெற்றிகாண முடியும். எந்தத் தியாகத்துக்கும் தமிழ் மக்கள் தயாராக இருக்கவேண்டும்"



இவ்வாறு சனவரி 10ம் நாள் தமிழ்த் தியாகிகளின் நினைவுச் சின்னங்களுக்கு அஞ்சலி நடைபெற்ற பின்னர் அங்கு பேசிய தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக் கிளையின் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் குறிப்பிட்டார்.

சனவரி 9ம் நாள் நிறுவப்பட்ட இந்நினைவுச் சின்னத்துக்கு சனவரி 10ம் திகதி காலை சமயாசாரப்படி அஞ்சலி செலுத்தப்பட்டது. மேளதாளம் முழங்க, மந்திரம் ஒலிக்க இந்நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கிறிஸ்தவ கீதங்களுக்கு மத்தியில் வண பிதா. சிங்கராயர் கிறிஸ்தவ மதக்கிரியைகளை ஒப்பேற்றினர். தேவார திருவாசகமும், வேத மந்திரமும் முழங்க ஆனைக்கோட்டை சிவஸ்ரீ குகதாசக்குருக்கள் தலைமையில் 11 இந்துக்குருமார் இந்து சமயச் சடங்குகளை நிறைவேற்றினர். சர்வமத அடிப்படையிலும் — மதங்கடந்த நிலையிலும் இந்த அஞ்சலி நிகழ்ச்சி நடைபெற்றது.

சமயக்கிரியைகள் முடிவடைந்ததும், இரு சிறுமிகள் முதலில் சின்னத்துக்கு மலர் தூவி அஞ்சலி செய்ததையடுத்து, தமிழர் கூட்டணித் தலைவர் மூதறிஞர் செல்வா, பேராசிரியர் சு. வித்தியானந்தன், திரு. மு. சிவசிதம்பரம், நாவலர் அமிர்தலிங்கம், ஆகியோருட்பட தமிழர் கூட்டணிப் பிரமுகர்களும், இளைஞர் பேரவையினரும் பொதுமக்களும் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

தமிழர் கூட்டணித் தலைமை நிலையத்திலிருந்து கைகளில் மலர்களுடன் மாவீரன் சிவகுமாரனின் தாயாரும், மகளிர் பேரவைத் தலைவியுமான திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரையும், திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கமும் அணி வகுத்துவர, அவர்களின் பின்னே பெண்கள் அணி செல்ல அதையடுத்து தமிழர் கூட்டணித் தலைவர்கள, பிரமுகர்கள், மௌனமாக அணிவகுத்துச் சென்று நினைவுச் சின்னத்துக்கு அஞ்சலி செலுத்தினர்.

தலைவர்கள், தமிழ்த் தியாகிகளின் நினைவுச் சின்னத்துக்கு மலராஞ்சலி செய்த போது — 'தங்கமாமணித் தமிழ் ஈழம் வாழியவே' என்ற உணர்ச்சிக் கவிஞரின் பாடலை திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பாடிக்கொண்டிருந்தார்.

பேராசிரியர் சு. வித்தியானந்தன் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

1974 சனவரி 10ம் திகதி நடைபெற்ற உயிர்ப்பலி உலகப் பிரசித்திபெற்றது. இனவிடுதலைக்கு உயிர்ப்பலி கொடுக்கத்தான் வேண்டும். இன விடுதலைக்குப்போராடி நாம் வீரமரணத்தைத் தழுவலாம். ஆனால் உயிர் கொடுத்த ஒன்பது தமிழர்களுக்கும் போராடச் சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. அவர்கள் பேடித்தனமாகக் கொல்லப்பட்டுவிட்டார்கள். பலர் சிறை சென்று, உயிர்த்தியாகம் செய்யும் போதுதான் இன விடுதலைப் போராட்டம் வெற்றியடையும்!"

# தமிழ்ப்பிரதேசங்கள்பறிமுதல்

## தமிழ் ஊர்களுக்கு சிங்களப் பெயர்கள்!

**பெரும்பான்மையாக தமிழர் வாழும் பனிக்கட்டி முறிப்புப் பிரதேசத்தை சிங்களப் பிரதேசமாக்குவதற்கு திட்டமிட்ட சூழ்ச்சி நடைபெறுகிறது. பனிக்கட்டி முறிப்புக்கு பனிக்கட்டியாவ என்று பெயர் சூட்டி இதை சிங்களப் பகுதி எனப் பிரகடனப்படுத்தி அதைத் திருகோணமலையில் இருந்து பிரித்து சிங்களப் தொகுதியோடு சேர்ப்பதற்கு திட்டமிட்ட சூழ்ச்சி நடைபெறுகிறது.**

இந்தத் தமிழ்ப் பிரதேசத்தை சிங்களப் பிரதேசம் எனக் காட்டுவதற்கு. நடைபெறும் சூழ்ச்சிகள் வருமாறு:-

(1) முதலிக்குளத்தில் புதிதாகத்திறக்கப்படவிருக்கும் காரியாதிகாரிப் பிரிவுக்கு சிங்களவரே காரியாதிகாரியாக நியமிக்கப்படவுள்ளார். சிங்களக் காரியாதிகாரி நியமிக்கப்பட்டால், இது சிங்களப் பிரிவு.

(2) பனிக்கட்டி முறிப்பு எனத் தமிழ்ப்பெயரோடு விளங்கும் இப்பிரதேசத்தை பனிக்கட்டியாவ என சிங்களப் பெயர் சூட்டி, திருமலையில் இருந்து பிரித்து சிங்களத் தொகுதியோடு சேர்ப்பதற்கு ஓர் முயற்சி, அப்படி நடந்தால் இ[illegible] சிங்களப் பிரிவு.

(3) பனிக்கட்டி முறிப்பு ப. நோ. கூ. (தமிழ்) சங்கத்தை கோமரங்கடவல பல நோ. கூ. சிங்களச்சங்கத்தோடு இணைப்பதற்கு ஓர் சூழ்ச்சி, அப்படிச்சேர்த்தால் இது சிங்களச் சங்கம்.

(4) முதலிக்குளம் என்னும் தமிழ்ப்பெயரைமொரவெல எனவும். நொச்சிக்குளத்தை நொச்சியாகம எனவும், பனிக்கட்டிமுறிப்பை பனிக்கட்டியாவ எனவும் கித்தில் ஊற்றை 'சாமபுர' எனவும் திட்டமிட்டு சிங்களப் பெயராக மாற்றியுள்ளனர்.

### தமிழ்த் தியாகிகளுக்..

—1-ம் பக்கத் தொடர்

ஞர்கள் நிறுவியபோது தமிழர் கூட்டணி செயலாளர் நாயகம் அ. அமிர்தலிங்கம் திரு. சி. கதிரவேற்பிள்ளை, அடலேறு ஆலாலசுந்தரம் மு. சிவசிதம்பரம் மற்றும பல கூட்டணிப் பிரமுகர்களும் தமிழாராய்ச்சிமன்ற இலங்கைக் கிளைப் பிரமுகரான திரு. க. சச்சிதானந்தமும் இன்னும் பல தமிழ் இளைஞர்பேரவைப் பிரமுகர்களும் அவ்விடத்தில் சமுகமளித்திருந்தனர்.

எவரும் இலகுவில் உடைக்கமுடியாதபடி இரும்புக் கேடர்கள் வைத்து சீமெந்தினால் சுமார் 10 அடி உயரத்துக்கு இந்தத் தூண் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மேற்கொண்டு 30 அடி உயரம்வரை அது கட்டியெழுப்பப்படவிருக்கிறது.

இந்நினைவுத் தூண் நிறுவப்பட்டபோது ஆயுதம் தாங்கியபொலிசாரும், சி. ஐ. டி. யினரும் தூரத்தில் நின்று அதைக் கண்காணித்தனராயினும் தடுக்கமுயலவில்லை. நினைவுச்சின்னம் நிறுவப்பட்டு யாவரும் அங்கிருந்து சென்றபின்னர், பொலிசார் அங்குவந்து அதன் உயரத்தை அளந்துசென்றுர்களாம்.

### தி. மு. க. ஆட்சியை ...

—1-ம் பக்கத் தொடர்

பிரமுகர்கள் சிலர் இந்திராவுடன் குசுகுசுப் பேச்சுக்கள் நடத்திவருவதாகவும், இதன்படி 1976 பெப்ரவரியுடன் தமிழக சட்டசபையைக் கலைத்துவிட்டு அதே நேரத்தில் தேர்தலை நடத்தாமல். ஓராண்டுக்கு நேரடி மத்திய ஆட்சியின்கீழ் தமிழ் நாட்டின் நிர்வாகத்தை வைத்திருக்கவேண்டும் என்று இவர்கள் ஆலோசனை கூறி வருகிறுர்களாம். இந்த ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டு தமிழ் நாட்டில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்படுமானுல்— அதையே பிரசாரமாக்கி தி.மு.கழகம் வெற்றிபெற்றுவிடும் என்று வேறு சில பிரமுகர்கள் எதிர்வாதிடுகின்றனராம்.

இது இப்படியிருக்க— இந்தியாவில் பேச்சுச்சுதந்திரம் உட்பட ஏழு அடிப்படை உரிமைகள் 8.1.76 முதல் திடீரென ரத்துச்செய்யப்பட்டுள்ளன. கூட்டம் கூடுதல், சங்கங்கள் அமைத்தல், இந்தியாவில் சுதந்திரமாக நடமாடுதல், இந்தியாவில் எந்த ஒரு பகுதியிலும் வாழுதல், உடைமையை வைத்திருத்தல், எந்த ஒரு தொழிலையும் செய்தல், வியாபாரம் அல்லது வர்த்தகம் செய்தல். ஆகிய அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன. இந்தத் திடீர் நடவடிக்கைக்கான காரணம் எதுவும் தெரியவில்லை.

### மட்டக்களப்பில்..

—1-ம் பக்கத் தொடர்

பொலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இளைஞர்பராதேவா இருப்புக்கம்பியினுல் நெஞ்சிலும் முதுகிலும் தாக்கப்பட்டாராம். தாக்குதலுக்குள்ளான மற்றோர் இளைஞரான தங்கவேலாயுதம் இரத்தவாந்தியெடுத்த நிலையில் அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறுர். இதையடுத்து மட்டக்களப்பில் பெருத்த கொந்தளிப்பு நிலவுகிறது. தமிழர் திருநாள் விழாவும் இதன் காரணமாக திட்டமிட்டப்படி நடைபெறவில்லை.

மட்டக்களப்பில் கடந்த இலை காலமாக தமிழர் கூட்டணி ஆதரவாளர்களுக்கெதிரான காடைத்தனங்கள் அதிகரித்துவருவதும், மட்டக்களப்பு தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. கா. அன்ரனும், அவரது தம்பி மகேந்திரனும் அண்மையில் இத்தகைய காடையர்களால் தாக்கப்பட்டதும் தெரிந்ததே.

"இந்தச் செய்தியையே இந்த ஆண்டின் பொங்கல் வாழ்த்தாக எல்லாத் தமிழர்களுக்கும் வழங்கவிரும்புகிறது உ. த. ப, இயக்கம்" இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் டாக்டர் சாலை இளந்திரையன்.

### சாலை இளந்திரை...

—4-ம் பக்கத் தொடர்

தும் இல்லை. இந்த உண்மையை நெஞ்சில் இருத்திக்கொண்டு, ஆங்காங்கு வாழும் தமிழ் மக்கள், தாயகத்தின் கட்சி வேறுபாடுகளைத் தங்கள் நாட்டுக்குள் இறக்குமதி செய்யாமல், தமிழர்கள் என்ற ஒரே முத்திரை உடையவர்களாக வாழ வேண்டும். இந்தப் பொது முத்திரையே தமிழர்களிடையேஒற்றுமையை வளர்க்கும். ஒற்றுமை இல்லாமல், குடியாட்சிக் காலத்தில், யாரும் எதையுமே சாதிக்க முடியாது.

### வீமன்காமத்தில் கூட்டணிக் கருத்தரங்கு

தமிழர் கூட்டணியின் கருத்தரங்கு ஒன்று வீமன்காமம் காந்திஜி சன சமூக நிலைய முன்றலில் 16-1-76 வெள்ளி மாலை நடைபெறுகிறது. இதில் கூட்டணித் தலைவர்களும் இளைஞர் பேரவை உறுப்பினர்களும் உரையாற்றுவார்கள்.

பின்வரும் இடங்களிலும் கருத்தரங்குகள் நிகழும்.

14—1—76 தெல்லிப்பழை, சரசாலை.

16—1—76 கீரிமலைக் கேணியடியில்.

17—1—76 பாண்டியன் தாழ்வு, சாவகச்சேரி.

18—1—76 உடுவில் தொகுதி.

### கிழக்கில் வெள்ள அபாயம்

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து பெய்யும் கடும் மழையினால் பெரும் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. வயல் வாடிகள் அனைத்தும் வெள்ளக்காடாக இருப்பதனால் விவசாயிகள் அவற்றை விட்டு வெளியேறுகின்றனர். ஏராளமானகால்நடைகளும் உயிரிழந்துள்ளன. மட்டக்களப்பு பஸ் நிலையம், சந்தை, விளையாட்டுத்திடல் ஆகியன வெள்ளத்துள் மூழ்கியுள்ளன. உன்னிச்சைக் குளத்தில் நீர்மட்டம் உயர்ந்து எந்நேரமும் உடைப்பெடுக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் உள்ள பல்வேறு [illegible] மிடையிலான பஸ் சேவைகள் [illegible]ப்பட்டுள்ளன.

### நாளை ஈழவேந்தன் பாராட்டுவிழா

ஈழவேந்தன் அவர்களுக்கு பாராட்டுவிழா (15—1—76) நாளை மாலை கொழும்புத் துறையில் நடைபெறுகிறது.

**பொங்கல் வாழ்த்துக்கள்**

அனைவருக்கும் எமது உளங்கனிந்த பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகுக. 15 விக்கலைத் திலை சோப் அக்லை, 2 பார் சோப் அக்லை. 2 நிம் வாசனை சோப் மேலுறைகளை அனுப்பி அழகிய காந்தி மேசைக்கலண்டர் ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு - 12 பண்டாரநாயகா வீதி, 194 ஏ, இலக்கத்தில் 1976-ம் வருடம் ஜனவரி மாதம் 14-ந் திகதி புதன்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.